

ஓம் சக்தி

# கல்கரி ஸ்ரீதேவிகருமாரிஅம்மன்ஆலய
# மஹோற்சவ விஞ்ஞாபனம்~2024

பேரன்புமிக்க அம்பாள் அடியார்களே!
அல்பேட்டாவின் கல்கரி நகரிலே எழுந்தருளி அடியார்களுக்கு கேட்டவரம் ஈந்தருளும் ஈஸ்வரியாம் அகிலாண்ட கோடி பிரமாண்டநாயகி கல்கரி ஸ்ரீதேவி கருமாரி அம்மனுக்கு நிகழும் மங்களகரமான குரோதி வருடம் ஆடித்திங்கள் 5ம்நாள் (20-07-2024) சனிக்கிழமை பூராட நட்சத்திரமும் பூரணைத்திதியும்கூடிய நண்பகல் 12:00 மணிக்குக்கொடியேற்ற வைபவம் நடைபெற்றுத்தொடர்ந்து, பதினைந்து நாட்கள் மஹோற்சவம் நடைபெறத் திருவருள் கூடியுள்ளதால் தங்களையும் தங்கள் குடும்பத்தினர்களையும் வருகைதந்து அம்பாளின் அருட்கடாட்சத்தினைப் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

## சாந்திப்பூசை நிகழ்ச்சி நிரல்கள் (19~07~2024 வெள்ளிக்கிழமை)

காலை *9:30* மணிமுதல் கணபதிஹோமம் நடைபெற்று அடியார்களுக்கு அருட்பிரசாதமும் வழங்கப்படும். மாலை 4:30 மணிக்குச்சாந்திப்பூசையும் நடைபெறும்.

## மஹோற்சவ நிகழ்ச்சி நிரல்கள்

காலை, மாலையென இருவேளைகளிலும் நவகலசஅபிஷேகம், யாகபூசை, ஸ்தம்பபூசை, வசந்தமண்டபபூசை என்பன நடைபெற்றுச் ஸ்ரீதேவி கருமாரி அம்மன் வீதியுலாவந்து அடியார்களுக்கு அருள்பாளிப்பார். அதனைத் தொடர்ந்து அம்பாள் அடியார்களுக்கு அருட்பிரசாதமும் வழங்கப்படும்.

## கொடியேற்ற நிகழ்ச்சி நிரல்கள் (20~07~2024 சனிக்கிழமை காலை)

காலை *7:.30* மணிமுதல் சங்கற்பம், விநாயகர்வழிபாடு, புண்ணியாகவாசனம், நவகலசபூசை,ஹோமம், அதனைத் தொடர்ந்து அபிஷேகமும் நடைபெற்று,நண்பகல் *12:00* மணிக்குக்கொடியேற்றமும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அம்பாள் அடியார்களுக்கு அருட்பிரசாதமும் வழங்கப்படும்.

## வேட்டைத்திருவிழா நிகழ்ச்சி நிரல்கள் (01~08~2024 வியாழக்கிழமை மாலை)

காலைப்பூசைகளினைத் தொடர்ந்து, மாலை 4:30 மணிமுதல் விஷேட அபிஷேகப்பூசைகளும் நடைபெற்று வேட்டைத்திருவிழாவும் பிராயச்சித்தஅபிஷேகமும் நடைபெற்றும். அதனைத் தொடர்ந்து அம்பாள் அடியார்களுக்கு அருட்பிரசாதமும் வழங்கப்படும்.

## சப்பற நிகழ்ச்சி நிரல்கள் (02~08~2024 வெள்ளிக்கிழமை மாலை)

காலைப்பூசைகளினைத் தொடர்ந்து மாலை 4:30 மணிமுதல் விஷேட அபிஷேகப்பூசைகளைத் தொடர்ந்து அம்பாள் அலங்காரச் சப்பறத்தில் வீதியுலாவந்து அடியார்களுக்கு அருள்பாளிப்பார். அதனைத் தொடர்ந்து பிராயச்சித்த அபிஷேகமும் நடைபெற்று, அம்பாள் அடியார்களுக்கு அருட்பிரசாதமும் வழங்கப்படும்.

## இரதோற்சவ நிகழ்ச்சி நிரல்கள் (03~08~2024 சனிக்கிழமை காலை)

காலை 7:30 மணிமுதல் சங்கற்பம், விநாயகர்வழிபாடு, புண்ணியாகவாசனம், நவகலசபூசை, ஹோமம் அதனைத் தொடர்ந்து அபிஷேகமும் நடைபெற்று, நண்பகல் 12:00 மணிக்கு விநாயகர், முருகன், சோமாஸ்கந்தர் சூழ கருமாரி அம்மன் அலங்கார இரதத்தில் ஆரோகணிப்பாள். பிற்பகல் 1:00 மணிக்கு பச்சைசாத்தல் உற்சவமும் பிராயச்சித்த அபிஷேகமும் நடைபெற்று அம்பாள் அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும்.

## தீர்த்தோற்சவ நிகழ்ச்சி நிரல்கள் (04~08~2024 ஞாயிற்றுக்கிழமை காலை)

காலை 9:30 மணிமுதல் சங்கற்பம், விநாயகர்வழிபாடு, புண்ணியாகவாசனம், நவகலசபூசை, ஹோமம் அதனைத் தொடர்ந்து அம்பாள் தீர்த்தத்தடாகத்தில் ஆரோகணிப்பாள். நண்பகல் 12:00 மணிக்கு அன்னதானப் பூசையினைத் தொடர்ந்து அம்பாள் அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும்.

## திருவூஞ்சல் நிகழ்ச்சி நிரல்கள் (04~08~2024 ஞாயிற்றுக்கிழமை மாலை)

மாலை 5:00 மணிமுதல் விஷேட அபிஷேகபூசைகளைத்தொடர்ந்து கொடியிறக்கம் நடைபெற்றுத் திருவூஞ்சல் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அம்பாள் அடியார்களுக்கு அருட்பிரசாதமும் வழங்கப்படும்.

## வைரவர் மடை நிகழ்ச்சி நிரல்கள் (05-08-2024 திங்கட்கிழமை மாலை)

மாலை 6:30 மணிமுதல் விஷேட அபிஷேகபூசைகளைத்தொடர்ந்து வைரவர் மடை நடைபெற்று அம்பாள் அடியார்களுக்கு அருட்பிரசாதமும் வழங்கப்படும்.

மஹோற்சவக்குருக்கள்

சிவாகம கிரியாகசிரோன்மணி சிவபிரமஸ்ரீ வைத்தியநாத உதயகுமாரக்குருக்கள்
சிவஸ்ரீ அலங்காரமணி உதயகுமார் மயூரன் சர்மா

காத்திடுவாள் ஆத்தாள் காற்றாகி

சுபம்

அறங்காவலர்கள்